# தினசரி சந்தை நிலவரத்தினால் ஏற்பட்ட அற்புத மாற்றம்


**பி.நாககேந்திரன்,**

**காய்கறி சில்லறை வியாபாரி,**

**ஒட்டன்சத்திரம் சந்தை,**

**திண்டுக்கல் மாவட்டம்.**

**அலைபேசி: 9750577596**




---

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி மையம். தினசரி சந்தை நிலவரம் என்ற ஒரு பெரிய திட்டத்தை உருவாக்க உள்ளது. நாங்கள் இந்த தினசரி சந்தை நிலவரம் பற்றிய விபரங்களை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் பணிபுரியும் சந்தை ஆய்வாளர்கள் மூலம் அறிந்து கொண்டோம். இந்த திட்டத்தின் நோக்கம் வியாபாரத்தில் ஒரு நவீன மாற்றத்தையும், நம்பிக்கையும் ஏற்படுத்துவதாகும்.

என் பெயர் பி.நாககேந்திரன், திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் எனது ஊராகும். எனக்குச் சொந்தமாக ஒட்டன்சத்திரம் சந்தையில் சில்லறை காய்கறி விற்பனைக் கடை உள்ளது. நான் காய்கறிகளை உள்ளூர் காய்கறி கடைகளுக்கும், விடுதிகளுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் குறைந்த விலையில் விற்று வருகிறேன். இருந்தாலும் எனக்கு சந்தை நிலவரங்களை எங்கே எப்பொழுது, எப்படி மற்றும் தரத்திற்கேற்ப என்ன விலை நிர்ணயிப்பது என்று புரியாமல் இருந்தேன். பிறகு எனக்கு ஒட்டன்சத்திரம் சந்தை ஆய்வாளர் மூலம் தினசரி சந்தை நிலவரம் பற்றி அறிந்தேன். என்ன தான் காய்கறிகளின் விலை கூடுதலாக அல்லது குறைவாக இருந்தாலும் எனக்கு சமீபகாலம் வரை மதுரை மற்றும் கோயமுத்தூர் சந்தை நிலவரங்களை அறியாததால் ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையிலேயே காய்கறி வகைகளை வாங்கி வந்தேன். மேலும் வியாபாரம் எனக்கு திருப்தியாக இல்லை.

பிறகு தினசரி சந்தை நிலவரத்தைப் பற்றி அறிந்தவுடன் என்னுடைய மொபைல் எண்ணைப் பதிவு செய்து அதன் மூலம் நார்த்தங்காயின் கும்பகோணம்

மற்றும் திருநெல்வேலி சந்தைகளின் விலை நிலவரத்தை அறிந்தேன். இந்தத் தகவலின் மூலம் எனக்கு எங்கே எப்பொழுது வியாபாரம் செய்வது என்ற அடிப்படை புரிந்தது. இப்பொழுதும் எனது மொபைல் செய்திகள் மூலம் விலை நிலவரங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறேன். ஒரு சமயம் ஒட்டன்சத்திரம் சந்தையில் நார்த்தங்காயின் விலை கிலோ ரூபாய் 42 ஆக இருந்தது. அதே வேளை, தினசரி சந்தை நிலவரம் மூலம் மதுரை சந்தையில் நார்த்தங்காய் மற்றும் எலுமிச்சை விலை சற்று குறைவாக இருந்தது. நான் மதுரைக்குந் சென்று நார்த்தங்காய் மற்றும் எலுமிச்சையை கொள்முதல் செய்து கிலோ ஒன்றுக்கு ரூபாய் 4 வீதம் லாபம் அடைந்தேன். அதே வேளை ஒட்டன்சத்திரம் சந்தை மூலம் எனக்கு கிலோ ஒன்றுக்கு ரூபாய் 2 மட்டுமே கிடைத்தது. இந்த லாபம் அடைந்தது தினசரி சந்தை நிலவரத்தினால் மட்டுமே. மேலும் தினசரி சந்தை நிலவரங்களின் மூலம் குறிப்பிட்ட வியாபாரிகளின் விபரங்கள், அனைத்து வகைகள், ஒவ்வொரு சந்தைகளின் விலை நிலவரங்கள் மற்றும் மொபைல் செய்திகள் மூலம் மற்ற சந்தைகளின் விலை விபரங்களையும் அறிய முடிகிறது.

தினசரி சந்தை நிலவரங்கள் குறித்த சேவையை அறிமுகப்படுத்திய தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானிகளுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.